# 15ஆம் திகதி மீண்டும் சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறும் கோரிக்கை

சர்வகட்சி மாநாட்டை மீண்டும் கூட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வக்கட்சி மாநாடு நடைபெறவுள்ளது.

பொலிஸ் அதிகாரங்களைத் தவிர 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட உள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி செயலகம் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இதனிடையே, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பான தங்கள் முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி மாநாட்டின்போது ஒப்புக்கொள்ளப்பட்டபடி, எதிர்வரும் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக குறித்த முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (க)


மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 18 வெள்ளிக்கிழமை 04.08.2023 கதிர் 44



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## வைத்திய நிபுணர்களுக்கு முல்லைத்தீவில் பற்றாக்குறை

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு பெரும் குறையாக உள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றையதினம் கருத்து தெரிவிக் கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளது. குறிப்பாக பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் உள்ள வைத்திய நிபுணர்கள் அதிகம் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள்.

இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலில் இரண்டு வைத்தியசாலைகளுக்கும் 2➤

## பறாளாய் ஆலய ஆக்கிரமிப்பு முயற்சி நாளை போராட்டத்துக்கு அழைப்பு



சுழிபுரம் - பறாளாய் முருகன் ஆலயத்தை ஆக்கிரமிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளை இடம்பெறவுள்ள இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக்கோரி நாளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

"இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற தொனிப் பொருளில் நாளை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை பேருந்து நிலையம் முன்பாக இடம்பெறவுள்ள கவன வீர்ப்புப் போராட்டத்திற்கு மக்கள் அனைவரும் அணி திரண்டு ஆதரவு வழங்க வேண்டும் என தமிழத் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. (க)

## மதவாச்சியைச் சென்றடைந்தது மலையகம் - 200 நடைபவனி



மலையக மக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு தலைமன்னாரிலிருந்து மாத்தளை நோக்கி மேற்கொள்ளப்பட்டுள்ள நடைபவனி, மதவாச்சியைச் சென்றடைந்துள்ளது.

வவுனியா - செட்டிக்குளம் பகுதியிலிருந்து இன்று காலை ஆரம்பமான இந்த நடைபவனி இன்று மதியம் மதவாச்சியைச் சென்றடைந்துள்ளது.

இந்த நடைபவனிக்கு ஆதரவு தெரிவித்து புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நடைபவனியும் இன்றைய தினம் மதவாச்சியை அடைந்தது. இதனையடுத்து இன்று பிற்பகல் மதவாச்சியில் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை மேற்கொள்ளப்படும் நடைபவனி நாளைய தினம் மிஹிந்தலையை சென்றடையவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மின் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு கோரிக்கை

மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டு சில வாரங்களேயாகும் நிலையில், மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, தொடர் மின்சார விநியோகத்திற்கான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்தது.

இந்த நிலையில், இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் கடந்த மாதம் 21 ஆம் திகதி முன்வைத்துள்ள யோசனையில், மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணத்தை 15 வீதத்தால் 2➤

## 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் எதிராக முன்னாள் இராணுவ அதிகாரி

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக முன்னாள் இராணுவ அதிகாரியான லெப்டினட் ஜெனரல் ஜகத் டயஸ், மாநாடு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக அதனை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச்செல்லும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு தும்முல்லை சம்புத்த ஜயந்தி விகாரையில் பிற்பகல் 3.30 முதல் மாலை 6.30 வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.



ஜகத் டயஸ், விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கடன் மறுசீரமைப்பு தொடர்பாக நாடாளுமன்றத்திற்கே அதிகாரம்!

### ஜனாதிபதி விடுத்த அறிவிப்பு

கடன் அதிகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நாடாளுமன்றம் தவிர்ந்த ஏனைய தரப்பினரின் உத்தரவுகளையோ அல்லது ஆலோசனைகளையோ செவிமடுக்க அரசாங்கம் தயாராக இல்லை, என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் மீது நாடாளுமன்றத்திற்கு மாத்திரமே அதிகாரம் உண்டு என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அவரது ஊடகப் பிரிவுச் செய்தி குறிப்பிட்டுள்ளது.



தெங்கு உற்பத்தியாளர் மாநாட்டில் இன்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் எனவும் அந்தச் செய்தி கூறுகிறது.

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலை செய்தி இதழ்

# தேர்தலுக்காக தமிழக மீனவர்களை அண்ணாமலை உசுப்பேற்றக் கூடாது!

இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர் அண்ணாமலை, கச்சதீவை மீட்டுத் தருவதாகத் தெரிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

தேர்தலுக்காக தமிழக மீனவர்களை அண்ணாமலை உசுப்பேற்றக் கூடாது என, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வலி வடக்கு சமாசத்தின் தலைவர் பாக்கியநாதன் றேகன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் இன்று இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், அண்ணாமலை இறுதியாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் தொடர்பில் கலந்துரையாடலில், இரு தரப்புப் புரிந்துணர்வுடன் பிரச்சினைகளைக் கையாள்வோம், எனத் தெரிவித்திருந்தார்.

தொப்புள்கொடி உறவுகளாக இருக்கும் நாம் முரண்பாடுகள் இன்றி, இந்திய இழுவைப்படகுகளை நிறுத்தி இலங்கைக் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதரத்திற்கு வழி ஏற்படுத்தித் தருவதாகவும் அவர் கூறிச் சென்றார்.

எனினும் தற்போது தேர்தலின்போது தமது வாக்கு வங்கிகளை நிரப்புவதற்காக கச்சதீவை இந்தியாவிற்கு மீட்டுத் தருவதாக பிரசாரம் செய்கின்றார், என அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு தேர்தலுக்காக அவர் கூறும் விடயங்களைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடற்றொழிலாளர் சமாசம் வலியுறுத்தல்

இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து சூறையாடுவதைத் தடுக்காது, மக்களைத் திசை திருப்பும் வகையில் கச்சதீவை மீட்டுத் தருவதாக பிரசாரம் செய்கின்றார். அண்ணாமலையின் இவ்வாறான கருத்தை வன்மையாக கண்டிக்கிறோம், எனவும் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வலி வடக்கு சமாசத்தின் தலைவர் பாக்கியநாதன் றேகன் தெரிவித்துள்ளார். (க)

# மீசாலை - புத்தூர்ச் சந்தியில் பேருந்து விபத்து தரிப்பிடம் உடைந்து வீழ்ந்தது - சாரதி படுகாயம்



சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பேருந்தின் சாரதி படுகாயம் அடைந்துள்ளார்.

நேற்று இரவு 7 மணியளவில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து புத்தர் சந்திப் பகுதியில் உள்ள பேருந்துப் பயணிகள் தரிப்பிடத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தினால் பயணிகள் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படாத போதும் பேருந்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

விபத்துத் தொடர்பாக பேருந்தின் முன் இருக்கையில் பயணித்த பயணிகள் தெரிவிக்கையில், விபத்து இடம்பெறுவதற்கு சற்றுமுன்னர் திடீரென பேருந்தின் பிரேக் மற்றும் ஸ்ரேறிங் இயங்கவில்லை, என சாரதி தெரிவித்ததாகவும், அதையடுத்த சில விநாடிகளில் விபத்து இடம்பெற்றதாகவும் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தின் போது யாழ்ப்பாணத்தில் இருந்த சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து மற்றும் டிப்பர் வாகனங்களும் சிறிதளவு சேதமேற்பட்டுள்ளதோடு, பழமையான பயணிகள் தரிப்பிடம் முற்றாக இடிந்து விழுந்துள்ளது.

விபத்துக்குள்ளான இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்தானது, அண்மையில் புதிதாக வழங்கப்பட்ட ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.




# முல்லைத்தீவு மாவட்டத்தில் நனோ நீர் சுத்திகரிப்பு நிலையம்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் திற்குட்பட்ட கூழாமுறிப்பு, கற்சிலைமடு, காதலியார் சம்மளங்குளம், ஒலுமடு ஆகிய கிராமங்களிற்கு சுத்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணத்துங்கவினால் கையளிக்கப்பட்டது.

சுத்தமான குடிநீர் இல்லாது மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். அத்தோடு தீரா நோயினாலும் அவதிப்படுகின்றனர். இந்த நிலையினைப் போக்கிட நனோ நீர் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவாட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சத்தியானந்த, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துளசேன, முல்லத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன் , ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி, கிராம அலுவலகர்கள், உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (02)

## மின் கட்டணத்தை மீண்டும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைப்பதற்கான தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டு 20 நாட்கள் மாத்திரம் கடந்துள்ள நிலையில் மீண்டும் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளமை பல தரப்பிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (கோ)

## வைத்திய நிபுணர்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு வைத்தியர்களையாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் சுகாதார அமைச்சரும் இருந்தனர்.

அதனை நாங்கள் தற்போது தொடர்ந்து கேட்கின்றோம். எதிர்வரும் காலத்தில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

விசேட ஆளணி எங்களுக்குத் தேவையாக உள்ளது. நிதி அமைச்சு புதிய ஆளணியை நியமிக்காத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. உள்ளகக் கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது. அதற்குத் திட்டம் ஏதாவது இருந்தால் மேற்கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் காணிப் பிரச்சினை தாமதமானதால் தேவையான பாரிய கட்டிடங்கள் அமைத்தலும் மேற்கொள்ளப்படவில்லை.

அதேபோல், மன்னாரிலும் சீரி ஸ்கான் இயந்திரம் கொண்டுவரப்பட்டு திரும்பிப் போனதால் பிரச்சினை இருந்தது. அங்கும் நிரந்தர வைத்தியப் பணிப்பாளர் இல்லாமையும் ஒரு பிரச்சினையாக உள்ளது, எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளகக்கட்டமைப்பைப் பேணுவதென்பது இரண்டு வைத்தியசாலையிகளிலும் குறைபாடாக இருக்கும் நிலையில், இது தொடர்பாக கூட்டத்தில் தீர்மானமாக எடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்களுடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டு இதனை நிவர்த்தி செய்வதற்குக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (கோ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை புதிய வகை கற்பித்தல் வெண்பலகை அறிமுகமும்

## பாடசாலை குறுஞ்செய்திச் சேவை அங்குரார்ப்பணமும்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் பெற்றோர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட இலகு கற்பித்தல் வெண்பலகை அறிமுகமும், பாடசாலை குறுஞ்செய்திச் சேவை அங்குரார்ப்பணமும், ஆசிரியர் கையேடு அறிமுகமும் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இலகு கற்பித்தல் வெண்பலகையை அறிமுகம் செய்து வைத்ததுடன் பாடசாலை குறுந்செய்தி சேவையையும் தொடங்கி வைத்தார். மேலும், ஆசிரியர் கையேடுகளையும் அறிமுகம் செய்துவைத்து மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்களிடம் கேட்டறிந்து மேலதிக ஆலோசனைகளையும் வழங்கி வைத்தார். மாணவர்களுக்கு கற்பித்தலில் ஈடுபட்ட வலயக் கல்விப்பணிப்பாளர், மாணவர்களுடன் சிநேகபூர்வ உரையாடல்களை மேற்கொண்டு கல்வி நடவடிக்கைகளின் மேம்பாடுகள் தொடர்பாகவும்ஆராய்ந்தார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ. மலீக், பாடசாலையின் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர் எந்திரி எம்.ஐ.எம். றியாஸ் அடங்கலாக உறுப்பினர்கள், தொழிலதிபர் எம்.ஜே.எம். காலீத் உட்பட பிரதியதிபர், ஆசிரியர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் வீடு புகுந்து தாக்குதல் பிரதான சந்தேக நபர் கைதானார்!

வவுனியா - தோணிக்கல் பகுதியில் வீடு புகுந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி அதிகாலை வவுனியா - தோணிக்கல் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பிறந்தநாள் விழா நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

பிறந்தநாள் விழா நடைபெற்றுக் கொண்டிருந்த வீட்டிற்குள் பிரவேசித்த சந்தேகநபர்கள், அங்கிருந்தவர்களை கூரிய ஆயுதங்களால் கடுமையாகத் தாக்கி வீட்டுக்கும் தீ வைத்தனர்.

இதில், அந்த வீடு தீக்கிரையாக்கப்பட்டதில் 23 வயதுடைய பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், தீக்காயங்களுக்கு உள்ளான அவரது கணவரான 35 வயதுடைய சுகந்தன் என்பவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், கடந்த 26 ஆம் திகதி உயிரிழந்தார். சம்பவத்தில் 2 வயதுடைய ஆண் குழந்தையொன் றும் 7 வயது மற்றும் 13 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளும் 19 முதல் 41 வயதுக்குட்பட்ட 4 பெண் களும் 42 வயதுடைய ஆண் ஒருவரும் காயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந் தும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித் திருந்தனர்.

இந்த நிலையில், தாக்குதலோடு சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட 5 சந்தேகநபர்களையும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தக்கொலை மற்றும்தாக்குதல்சம்பவம்தொடர்பான விசாரணை வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி அகமட் ரசீம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, 5 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு நீதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், எதிர்வரும் 11 ஆம் திகதி ஆளடையாள அணி வகுப்பிற்காக 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் சாட்சிகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும், எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாள்கள் மற்றும் கோடரி, கத்தி, இரும்புக்கம்பி என்பனவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவினர், வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் உள்ளிட்ட பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டே 20- 30 வயதுக்குட்பட்ட குறித்த சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

பிரதான சந்தேகநபர் ஊடாக, கொலையை மேற்கொள்ள இவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான கூமாங்குளத்தை சேர்ந்த ஒருவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவரிடம் வவுனியா குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)



# முல்லைத்தீவு மல்லாவிக் குளத்தில் ஆயிரக்கணக்கான மீன்கள் இறப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மல்லாவிக் குளத்தில் விவசாயத்திற்கு நீர் விநியோகிக்கும் கால்வாயில் ஆயிரக்கணக்கான மீன்கள் இறந்து காணப்படுகின்றன.

தற்போது நிலவுகின்ற கடுமையான வெயில் காரணமாக குறித்த குளத்தின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் மீன்கள் இவ்வாறு இறந்திருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மீன்கள் சில மாதங்களுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்டு குளத்தில் விடப்பட்ட மீன் குஞ்சுகளாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (02)



# பொதுநலவாய விளையாட்டுப் போட்டி - 2030 ஏலத்திலிருந்து விலகிய கனடாவின் அல்பர்ட்டா

2030 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏலத்திலிருந்து கனடாவின் அல்பர்ட்டா அரசாங்கம் தனது விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுள்ளது.

அதிகமாகவுள்ள செலவுகள் காரணமாகவே ஏல விண்ணப்பத்தை ரத்துச் செய்ததாக அல்பர்ட்டா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த ஏலம், அல்பர்ட்டாவுக்கு ஏற்றதாக இல்லை. ஏலத்தொகை குறைந்திருக்குமானால் அரசுக்கும் வரி செலுத்துவோருக்கும் அது சிறப்பானதாக அமைந்திருக்கும். ஆனால், அது அவ்வாறு இல்லை, என்று இது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

ஏல விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்



டமை தொடர்பாக கனடாவின் பொதுநலவாய விளையாட்டுக்களுக்கான அமையத்துக்கு அல்பர்ட்டா அரசு அறியத்தந்துள்ளது.

கனடாவின் சுற்றுலா மற்றும் விளையாட்டு அமைச்சர் ஜோசப் ஸ்கோ, மாநிலத்தால் ஏற்க முடியாத அளவுக்கு செலவுகள் அதிகமாக உள்ளதால் ஏலத்தைத் திருப்பப் பெற்றுக்கொண்டோம், என்று அல்பர்ட்டா அரசாங்கம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டு விக்டோரியாவில் நடைபெறவிருந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏலத்திலிருந்து கடந்த மாதம் அவுஸ்திரேலியாவின் விக்டோரியா பிராந்தியம் வெளியேறியிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. (மி)

# தேர்தல் முடிவை மாற்ற முயன்ற குற்றம் மீண்டும் தப்பினார் டொனால்ட் ட்ரம்ப்!

## டிரம்ப் குற்றமற்றவர் - அடுத்தகட்ட விசாரணை ஆரம்பம்



2020 ஜனாதிபதித் தேர்தல் முடிவை மாற்ற முயற்சித்ததாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

5 வருடச் சிறைத்தண்டனைக்குரிய குற்றமான அமெரிக்காவை ஏமாற்றும் நோக்கில் சதி செய்தல், 20 வருட சிறைக்குரிய குற்றமான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல், உத்தியோகபூர்வ நடவடிக்கைகளைத் தடுக்கச் சதி செய்தல் மற்றும் 10 வருடச் சிறைக்குரிய குற்றமான அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட உரிமைகளை ஒருவர் நிறைவேற்ற முயலுவதைத் தடுக்கச் சதி செய்தல் என 4 முக்கிய பிரிவுகளில் அவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில், வொஷிங்டன் டி.சி. நீதிமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று விசாரணைகளுக்காக ஆஜராகியிருந்தார்.

விசாரணையில், 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை மாற்றி அமைப்பதற்கான முயற்சிகள் தொடர்பான 4 கிரிமினல் குற்றச்சாட்டுகளில் டொனால்ட் ட்ரம்ப் சம்பந்தப்படவில்லை, அவர் குற்றமற்றவர் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கின் சாட்சியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள எவருடனும் தொடர்பு கொள்ளக்கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ஏனைய வழக்குகளுக்கு அவருக்குப் பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை ஒகஸ்ட் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (கோ)




# சிகரெட்களில் எச்சரிக்கை வாசகங்கள் கனடா கொண்டுவந்துள்ள நடைமுறை

சிகரெட் புகைப்பதனால் ஏற்படும் உடல்நலத் தீங்கு குறித்த எச்சரிக்கை வாசகத்தை ஒவ்வொரு சிகரெட்டிலும் அச்சடிக்கும் கொள்கை ரீதியான முடிவை கடந்த ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் கனடா நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

உலக அளவில் சிகரெட் பிடிப்பதால் கோடிக்கணக்கான மக்கள் உடல் ரீதியாகப் பாதிக்கப்படுகின்ற நிலையில், ஒவ்வொரு சிகரெட்டிலும் சிகரெட் புகைப்பதனால் ஏற்படும் உடல்நலத் தீங்கு குறித்த எச்சரிக்கை வாசகத்தை பதிப்பது தொடர்பாக கொள்கை ரீதியாக கனடா அரசாங்கம் கடந்த ஆண்டு தீர்மானித்தது.

இந்த ஆண்டின் பிற்பாதியில் இது செயல்பாட்டுக்கு வரும் என முன்னர் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, தற்போது ஒவ்வொரு சிகரெட்டிலும் எச்சரிக்கை வாசகத்தைப் பதித்து, சிகரெட்கள் விற்பனை செய்யும் செயற்பாடு கனடாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'ஒவ்வொரு இழுப்பிலும் விஷம்', 'சிகரெட் ஆண்மைக் குறைவை ஏற்படுத்துகிறது', 'சிகரெட் புற்றுநோயை ஏற்படுத்தும்', 'சிகரெட் புகை குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும்', 'சிகரெட் உங்கள் உடல் உறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்தும்' போன்ற வாசகங்கள் சிகரெட்களில் அச்சிடப்பட்டுள்ளன.

தற்போது, கிங் சைஸ் எனப்படும் பெரிய அளவான சிகரெட்களில் இந்த வாசகங்கள் இடம்பெற்றிருப்பதாக கனேடிய செய்திகள் தெரிவிக்கின்றன. (மி)

# ரஷ்யா, பெலாரஸில் ட்ரோன் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்கும் ஈரான்



ரஷ்யாவிற்கு ட்ரோன்களை விற்பனை செய்வதன் மூலம் ஈரானுக்கு பெருமளவிலான பொருளாதார நன்மைகள் கிடைக்கவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், ட்ரோன்களுக்கு மாற்றாக ரஷ்யாவிடம் இருந்து ரஷ்ய சு-35 போர் ஜெட் விமானங்களை ஈரான் மாற்றத் திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (கோ)

பெலாரஸ் மற்றும் ரஷ்யாவில் ஆளில்லா ட்ரோன் விமானங்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை ஈரான் அமைத்து வருவதாக போர் ஆய்வுக்கான நிறுவனம் (ஐ எஸ் டபிள்யு) தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் உக்ரைன் போருக்குத் தேவையான ட்ரோன்களை ரஷ்யா எளிதாகப் பெறமுடியும் என்றும், ஈரானுக்கு உடனடி பொருளாதார மற்றும் ராணுவ நலன்கள் கிடைக்கும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெலாரஸ் மற்றும் ரஷ்ய அரசாங்கத்துடன் நீண்ட கால மூலோபாய ஒப்பந்தங்களில் ஈரான் கையெழுத்திட்டு இருப்பதாகவும், இந்த ஒப்பந்தங்கள் இரு தரப்பிற்கும் பல்வேறு பலன்களைக் கொடுக்கக் கூடிய வகையில் இருப்பதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பெலாரஸில் ட்ரோன் தொழிற்சாலைகளை ஈரான் அமைப்பதன் மூலம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ரஷ்யாவிற்கு ட்ரோன்களைக் கொண்டு வருவதில் இருக்கும் சிக்கல்கள் முழுமையாக நீக்கப்படவுள்ளன.

# உலகளவில் ஆயுத ஏற்றுமதி பிரான்ஸ் இரண்டாம் இடம்?

ஆயுத ஏற்றுமதியில் ரஷ்யாவைப் பின்னுக்குத் தள்ளி உலக அளவில் பிரான்ஸ் இரண்டாவது இடத்துக்கு விரைவில் முன்னேற வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய பிரான்ஸ் மேற்கொண்டுள்ள புதிய ஆயுத ஏற்றுமதி ஒப்பந்தம், பிரான்ஸ் பாதுகாப்புத் துறையின் வேகமான முன்நகர்வை எடுத்துக்காட்டுகிறது.

இதன்படி, பிரான்ஸிடம் இருந்து இந்தியா 6 ஸ்கார்பீன் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 26 ரபேல் போர் விமானங்களையும், கட்டார் பிரான்சிடமிருந்து 24 ரபேல் போர் விமானங்களையும் வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் உலக ஆயுத ஏற்றுமதியில் கடந்த நான்கு ஆண்டுகளில் 7.1 சதவீதமாக இருந்த பிரான்ஸின் பங்கு தற்போது 11 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதே சமயம், உக்ரைனுடனான போர் நடவடிக்கை காரணமாக ரஷ்யாவின் ஆயுத ஏற்றுமதி 22 சதவீதத்தில் இருந்து 16 சதவீதமாகச் சரிவைச் சந்தித்து வருகிறது.

இந்த நிலையில், உலக அளவில் ஆயுத ஏற்றுமதி



யில் ரஷ்யாவைப் பின்னுக்குத் தள்ளி அமெரிக்காவைத் தொடர்ந்து பிரான்ஸ் இரண்டாவது மிகப்பெரிய ஆயுத ஏற்றுமதி நாடாக விரைவில் முன்னேற வாய்ப்பு இருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டின் கடைசியிலும், 2023 ஆம் ஆண்டிலும் கிடைத்துள்ள ஆயுத ஒற்றுமதிக் கேள்விகள் சீரான முறையில் தொடரும் என்றும், பிரான்ஸ் நாட்டின் போக்கு தெளிவாக இருப்பதாகவும் ஸ்டொக்ஹோம் சர்வதேச சமாதான ஆய்வுக் கல்வியக (SIPRI) அறிக்கையின் ஆசிரியர் பீட்டர் வெஸ்மேன் தெரிவித்துள்ளார். (கோ)

## ஐபிஎல் தொடரில் ஆர்சிபியின் தலைமை பயிற்சியாளராக அன்டி பிளவர் நியமனம்!



ஐபிஎல் தொடரில் விளையாடும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்சிபி) அணியின் தலைமைப் பயிற்சியாளராக அன்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆர்சிபியின் இயக்குநர் மைக் ஹெஸ்ஸன் மற்றும் தலைமைப் பயிற்சியாளர் சஞ்சய் பங்கரின் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாததைத் தொடர்ந்து, அன்டி பிளவரிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நடந்து முடிந்த ஐபிஎல் தொடரில் ஆர்சிபி அணி புள்ளிகள் பட்டியலில் ஆறாவது இடத்தையே பிடித்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் ஆர்சிபி பிளே ஓப்புக்குள் நுழையாதது இதுவே முதன்முறை. இந்த நிலையில், கிரிக்கெட் இயக்குநர், தலைமைப் பயிற்சியாளர் உள்பட பயிற்சியாளர் குழுவை ஆர்சிபி அணி நிர்வாகம் மாற்றியமைக்க உள்ளதாகத் தகவல் வெளியானது.

இதைத்தொடர்ந்து, மைக் ஹெஸ்ஸன் மற்றும் சஞ்சய் பங்கரின் ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படுவது குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என ஆர்சிபி நிர்வாகம் தெரிவித்தது.

கடந்த ஐபிஎல் போட்டி வரை லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்தவர் அன்டி பிளவர். இவரது தலைமையில் சூப்பர் ஜெயன்ட்ஸ் அணி, இரு முறையும் பிளே ஓப்புக்குள் நுழைந்தது. கடந்த மாதம் இவருக்குப் பதிலாக ஜஸ்டின் லாங்கர் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, தலைமைப் பயிற்சியாளர் பொறுப்புக்கு நிமிப்பது தொடர்பாக அன்டி பிளவரோடு ராஜஸ்தான் ரோயல்ஸ் நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

தற்போது ஆர்சிபி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நான் மதிக்கக்கூடிய இரு பயிற்சியாளர்களான மைக் ஹெஸ்ஸன் மற்றும் சஞ்சய் பங்கர் ஆகியோரின் பணிகளுக்கு மதிப்பளிக்கிறேன். குறிப்பாக, டப் டு பிளெஸ்ஸியுடன் மீண்டும் இணைவதில் மிகுந்த உற்சாகம் கொள்கிறேன். கடந்த காலங்களில் இருவரும் இணைந்து சிறப்பாகவே பணியாற்றியுள்ளோம். எங்களது உறவு, மேலும் புதிய உயரத்தைத் தொடுவதை எதிர்நோக்கியுள்ளேன்" என்று அன்டி பிளவர் குறிப்பிட்டுள்ளார்.

அன்டி பிளவர், லக்னௌ சூப்பர் ஜெயன்ட்சுக்கு முன்பு பஞ்சாப் கிங்ஸ் அணியில் இரு ஆண்டுகள் துணைப் பயிற்சியாளராகப் பணியாற்றியிருந்தார். சர்வதேசக் கிரிக்கெட்டில் இங்கிலாந்தின் வெற்றிகரமான பயிற்சியாளராக அவர் இருந்திருக்கிறார். இவர் பயிற்சியாளராக இருந்த காலத்தில் தான் இங்கிலாந்து 2010 இல் ரி-20 உலகக் கிண்ணத்தை வென்றது.

பிஎஸ்எல் தொடரில் முல்தான் சுல்தான்ஸ், ஐஎல்டி 20யில் கல்ப் ஜெயன்ட்ஸ், ஆடவர் தி ஹண்ட்ரட் தொடரில் டிரென்ட் ராக்கெட்ஸ் ஆகிய அணிகள் சம்பியன் பட்டங்களை வென்றிருக்கின்றன. இந்த அணிகளின் தலைமைப் பயிற்சியாளராக இருந்தவர் அன்டி பிளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிபிஎல் தொடரில் அன்டி பிளவரின் டெயின்ட் லூசியா கிங்ஸ், இரு முறை இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்துள்ளது. சமீபத்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் ஆலோசகராகவும் அன்டி பிளவர் செயல்பட்டிருந்தார்.




## ஓவல் டெஸ்ட்டில் பந்தை மாற்றிய முறை சர்ச்சைக்கு விளக்கம் வெளியிட்டது ஐசிசி

ஆஷஸ் தொடரின் கடைசி டெஸ்ட்டில் பந்தை நடுவர்கள் மாற்றியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொன்டிங் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், இது தொடர்பாக ஐசிசி விளக்கமொன்றை அளித்துள்ளது.

இதுகுறித்து ஐசிசியின் செய்தித் தொடர்பாளர் பேசியபோது, ஆட்டங்களில் நடுவர்கள் எடுக்கும் முடிவுகள் குறித்து ஐசிசி கருத்துத் தெரிவிப்பதில்லை. இருப்பினும், ஒவ்வொரு போட்டியும் தொடங்குவதற்கு முன்பு அனைத்துப் பந்துகளும் முன்கூட்டியே தேர்ந்தெடுக்கப்பட்டவை என்பதை நாங்கள் உறுதிப்படுத்த முடியும்.

சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது, பயன்படுத்தப்பட்ட பந்தைப் போன்ற நிலையில் உள்ள பந்தையே போட்டி அதிகாரிகள் தேர்வு செய்கிறார்கள், என்று உறுதிப்படுத்தினார்.

ஓவல் டெஸ்ட்டின் கடைசி நாளின் 37 ஆவது ஓவரில் பந்து மாற்றப்பட்டது. ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பந்தைப்போல மாற்றப்பட்ட பந்து இருக்கவில்லை என ரிக்கி பொன்டிங், அவுஸ்திரேலிய அணி வீரர்கள் உஸ்மான் க்வாஜா, மக்ஸ்வெல் ஆகியோர் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்.

பயன்படுத்தப்பட்ட பந்தை விட தேர்ந்தெடுக்கப்பட்ட பந்தில் இரண்டு மடங்கு சுவிங் இருந்ததாகவும் இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் ரிக்கி பொன்டிங் தெரிவித்திருந்தார்.

அதேபோல, அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உஸ்மான் க்வாஜா, பந்து மாற்றப்பட்டபோதே அது குறித்து நடுவரிடம் புகார் அளித்ததாகவும், தேர்வு செய்யப்பட்ட பந்து 8 ஓவர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டதைப் போல புதியதாக இருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.



## உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் இலங்கை அஞ்சலோட்ட அணிக்கு இடம்!

ஹங்கேரியின் புடாபேஸ்ட் நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 4 × 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது.

இதன்மூலம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை அஞ்சலோட்ட அணியொன்று உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்குத் தகுதி பெற்ற சாதனையைப் புரிந்துள்ளது.

இலங்கை 4 × 400 மீற்றர் அஞ்சலோட்ட அணி, தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்ற 25ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் பங்குகொண்டு, 3 நிமிடங்கள் 1.56 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றது. இதன்மூலம் இலங்கை அஞ்சலோட்ட அணிக்கு உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பிற்கான அணிகள் தரப்பத்தலில் 12ஆவது இடத்தை பிடிக்க முடிந்தது.

உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 4 × 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிக்கு முதல் 16 இடங்களில் உள்ள அணிகளே தகுதி பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அருண தர்ஷன, ராஜித ராஜகருணா, பபசர நிகு மற்றும் காலிங்க குமாரகே ஆகிய நான்கு வீரர்களுமே ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற இலங்கை அணியில் இடம்பெற்றிருந்தனர். அதேபோல, மேலதிக வீரராக பசிந்து கொடிகார அணியில் இடம்பிடித்திருந்தார்.

இதனிடையே, கடந்த வாரம் சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 101ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் போட்டியிட்ட இதே அஞ்சலோட்ட அணி இந்திய அணியுடன் போட்டியிட்டு இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

புடாபேஸ்ட் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் 4 × 400 மீட்டர் அஞ்சலோட்ட அணி தவிர இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோனும் 100 மீற்றர் ஓட்டப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தார். எனினும், தற்போது உபாதையால் அவதியுற்று வரும் அவர், இந்த ஆண்டு நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை என தெரிவித்துள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.08.2023இல் வெளியிடப்பெற்றது.